IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, NAMAKKAL

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

CC . No. 310/2020 Dep.of - PW.4

| | | | |
|---|---|---|---|
| Name | : செல்வி | Caste | : |
| Fathers Name | : | Calling | : |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act x of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------22

Chief Examination : Date : 28.11.2022

நான் தற்பொழுது நாமக்கல் மாரிகங்காணித் தெருவில் குடியிருந்துகொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1 அன்னக்கிளி, அ.சா.2 மஞ்சுளா. அ.சா.3 சுப்பலட்சுமி ஆகியோர்களை எனக்கு தெரியும். கடந்த 28.04.2018 ம் தேதியன்று இரவு 09.15 மணிக்கு வண்டிக்காரத் தெருவில் இருந்து மாரியம்மன்கோவிலுக்கு பால்குடம் எடுத்து வந்தோம். அப்பொழுது எதிரிகள் சுண்ணாம்புக்கார தெருவில் இருந்து தேர் இழுத்து வந்தார்கள். 1ம் எதிரி ஒரு பையனை துரத்திக்கொண்டு வந்தார். அ.சா.1 அன்னக்கிளி என்பவர் 1ம் எதிரியிடம் எதற்காக அந்த பையனை துரத்திக்கொண்டு செல்கிறீர் என்று கேட்டார். அதற்கு 1ம் எதிரி நீ என்னடி கேட்கறே எ ன்று கூறி கல்லை எடுத்து அடித்துவிட்டார். எதிரிகள் அனைவரும் கல்லை எடுத்து அ.சா.1ஐ அடித்துவிட்டார்கள். அப்பொழுது அ.சா.2 மஞ்சுளா, அ.சா.3 சுப்புலட்சுமி மற்றும் எனக்கும் அடிபட்டுவிட்டது. 2ம் எதிரி அ..சா.1ஐ பார்த்து இன்னைக்கு விட்டுவிட்டேன் என்னைக்கு இருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கல்லை காட்டி மிரட்டினார். அ.சா.1க்கு வலது கையில் அடிபட்டுவிட்டது. எனக்கு முதுகில் அடிபட்டுவிட்டது. அ.சா.2 மஞ்சுளாவுக்கு இடுப்பில் அடிபட்டுவிட்டது. அச.ா.3 சுப்புலட்சுமிக்கு காலில் அடிபட்டுவிட்டது. பின்னர் அடிபட்ட நாங்கள் நாமக்கல் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றோம். சம்பவம் தொடர்பாக அ.சா.1 புகார் கொடுத்தார். வழக்கு பதிவு செய்த நாமக்கல் காவல் நிலைய போலிசார்

என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

சுண்ணாம்புக்காரர் தெருவில் உள்ள பகவதியம்மன் கோவிலுக்கு 2ம் எதிரி தர்மகர்த்தா என்றால் சரிதான். 2ம் எதிரியின் தலைமையில் தான் சம்பவம் நடந்ததாக கூறப்படும் தேதியன்று சுண்ணாம்புக்கார தெருவில் தேர் திருவிழா நடந்தது என்றால் சரிதான். அந்த தேர் திருவிழாவிற்கு போலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. அந்த தேர் திருவிழாவிற்கு போலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது என்றாலும், காவல் துறையினருக்கும் எங்கள் தெருவை சேர்ந்த இருபத்தி ஒரு நபர்களுக்கும் பிரச்சனை ஏற்பட்டு அவர்கள்மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றாலும் அது பற்றி எனக்கு தெரியவில்லை. சுண்ணாம்புக்கார தெருவில் அனைத்து சமூகத்தாரும் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். அ.சா.1 அன்னக்கிளி என்பவரின் அண்ணன் பெயர் என்ன என்றால் கோவிந்தசாமி ஆகும். நாமக்கல் – சேந்தமங்கலம் மெயின் ரோட்டிற்கும், கோவிந்தசாமி வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் ஐம்பதடி தூரம் இருக்கும். சுண்ணாம்புக்கார தெருவில் உள்ள பகவதியம்மன் தேர் திருவிழாவின்பொழுது தேரானது எங்கள் தெருவிற்கு வராது என்றால் சரிதான். அ.சா.1ன் அண்ணன் கோவிந்தசாமி என்பவரின் வீடானது ஒரு சந்துக்குள் உள்ளது என்றால் சரியல்ல. மெயின் ரோட்டில் உள்ளது. நான் மாரிகங்காணித் தெருவில் எத்தனை வருடங்களாக குடியிருந்து வருகிறேன் என்றால் முப்பது வருடங்களாக குடியிருந்து வருகிறேன். சம்பவம் நடந்ததாக கூறப்படும் நேரத்தில் அந்த இடத்தில் ஆண்கள் யாரும் இல்லையா என்றால் இல்லை. நான் சொல்வதுபோன்று எவ்வித சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை.

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, NAMAKKAL
(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

CC . No. 310/2020 Dep.of - PW.5

Name : தனபாக்கியம் Caste :

Fathers Name : Calling :

Village : Religion:

Taluk : Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act x of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------22

Chief Examination : Date : 28.11.2022

நான் தற்பொழுது நாமக்கல் வெள்ளவாரித் தெருவில் குடியிருந்துகொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1 அன்னக்கிளி, அ.சா.2 மஞ்சுளா. அ.சா.3 சுப்பலட்சுமி, அ.சா.4 செல்வி ஆகியோர்களை எனக்கு தெரியும். கடந்த 29.04.2018 ம் தேதியன்று இரவு சுமார் 09.15 மணிக்கு வண்டிக்காரத் தெருவில் உள்ள மாரியம்மன் கோவிலுக்கு நாங்கள் பால்குடம் எடுத்துக்கொண்டு சென்றோம். அப்பொழுது 2 ம் எதிரி கணேசன் என்பவர் ஒரு பையனை துரத்திக்கொண்டு வந்தார். அ.சா.1 அன்னக்கிளி என்பவர் என்ன பிரச்சனை என்று 2 ம் எதிரியிடம்கேட்டார். அப்பொழுது 2 ம் எதிரி அ.சா.1 ஐ பார்த்து பரத்தேவடியா நீ யாருடி கேட்பதற்கு என்று கேட்டார். எதிரிகள் அனைவரும் சரமாரியாக கல்லை எடுத்து எங்கள்மீது வீசினார்கள். இந்த சம்பவமானது அ.சா.1 ன் அண்ணன் பழனிச்சாமி என்பவரின் வீட்டருகில் நடந்தது. நாங்கள் ஏன் இப்படி செய்கறீர்கள் என்று கேட்டதற்கு இன்னைக்கு விட்டுவிட்டு போரோம், இன்னொரு நாளைக்கு உங்களை பார்த்தால் கொல்லாமல் விடாமட்டோம் என்று கூறிவிட்டு கல்லை காட்டி மிரட்டிவிட்டு சென்றுவிட்டார்கள். பின்னர் அடிபட்ட நாங்கள் நாமக்கல் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றோம். சம்பவம் தொடர்பாக அ.சா.1 புகார் கொடுத்தார். இது சம்பந்தமாக நாமக்கல் போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

நான் வெள்ளவாரித் தெருவில் எத்தனை வருடங்களாக குடியிருந்து வருகிறேன் என்றால் முப்பது வருடங்களுக்கு மேல் குடியிருந்து வருகிறேன். சுண்ணாம்புக்கார தெருவில் உள்ள பகவதியம்மன் கோவிலுக்கும், எனது வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் பதினைந்தடி தூரம் இருக்கும். சுண்ணாம்புக்கார தெருவில் உள்ள பகவதியம்மன் கோவிலுக்கும், அ.சா.1ன் அண்ணன் பழனிசாமி என்பவரின் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் பத்தடி தூரம் இருக்கும். சுண்ணாம்புக்கார தெருவில் நடந்த பகவதியம்மன் தேர் திருவிழாவிற்கு போலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது என்றால் சரிதான். 2ம் எதிரி துரத்திக்கொண்டு வந்ததாக கூறும் பையனை பற்றி விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் சொல்வதுபோன்று எதிரிகள் எவ்வித குற்ற சம்பவத்திலும் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல. மாரிகங்கானித் தெருவை சேர்ந்த இருபத்தி ஒரு நபர்கள்மீது போலிசார் வழக்கு பதிவு செய்துள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை.